மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

(அ) ஆம்.

(ஆ) இம் மருந்தகம் காலியாயிருந்த மருத்துவ அலுவலர் குடியிருப்பிற்கு மாற்றப்பட்டு தற்போது இயங்கி வருவதால் அரசின் நிதி நிலைமைகளுக்கேற்ப பரிசீலிக்கப்பட்டு முடிவெடுக்கப்படும்.

உள்ளாட்சி மருந்தகங்களுக்கு நிதி உதவி.

* வினா எண். 699—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

நகராட்சி மன்றங்கள், பஞ்சாயத்து யூனியன்கள் நடத்தும் மருந்தகங்களுக்கு மருந்துகள் வாங்குவதற்காகும் செலவு தொகையை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : நகராட்சி மன்றங்கள் மற்றும் பஞ்சாயத்து ஒன்றியங்கள் நடத்தும் மருந்தகங்களுக்கு மருந்துகள் வாங்வதற்காகும் செலவுத் தொகையை அதிகப்படுத்தி அரசு உத்திரவு கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டுள்ளது :—

பகுதிநேர மருந்தகம் மருந்துச் செலவு ஒருவருடத்திற்கு ரூ. 2,500-லிருந்து ரூ. 5,000 மாக அதிகப்படுத்தப்பட்டுள்ளது. முழுநேர மருந்தகத்திற்கு மருந்துச் செலவு ஒரு வருடத்திற்கு, ரூ. 5,000 லிருந்து ரூ. 10,000 மாக அதிகப்படுத்தப்பட்டுள்ளது. தேவையான பண ஒதுக்கீடு செய்வதும் அவற்றிற்கான மருந்து வகையராக்களை வாங்குவதும் அந்தந்த ஸ்தல ஸ்தாபனங்களின் பொறுப்பாகும்.

திரு. தி. அன்பழகன் : இந்த ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்படும் மருந்தகங்களில் மருந்து இல்லாத குறை பெரிய குறையாக இருக்கிறது. இதுபோன்ற மருத்துவ மனைகளை அரசு மருத்துவ மனையாக மாற்றும் எண்ணம் அரசுக்கு உண்டா?

[1979 ஏப்ரல் 17]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : ஊராட்சி ஒன்றியங்களுடைய மருந்தகங்களை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கொள்கை அளவில் முடிவு செய்யப்பட்டு படிப்படியாக அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதற்கிடையில் எந்தவிதமான மருந்துத் தட்டுப்பாடும் வரக்கூடாது என்பதற்காகத்தான் நிதிநிலையை ஒதுக்கி வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : நகராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் நடத்தக்கூடிய மருத்துவ மனைகளில் போதிய மருந்துகள் இல்லையென்பதும் அங்கு வரக்கூடிய நோயாளிகளுக்கு காலாகாலத்தில் தேவையான மருத்துவ உதவி கிடைக்கவில்லை என்பதுபற்றி அரசுக்குப் புகார் வந்திருக்கிறதா? அந்தப் புகாரின்பேரில் தேவையான மருந்துக்கள் அளிக்க செய்யப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : நகராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றால் நடத்தப்படும் மருத்துவ மனைகளில் வழங்கப்படுகிற மருந்துகள் போதுமான அளவு இல்லையென்று அறிந்த பிறகுதான் தற்போது மருந்துக்காக அளிக்கப்படுகின்ற நிதியை ரூ. 2,500-ல் இருந்து ரூ. 5,000 ஆகவும், ரூ. 5,000 ஆக இருந்ததை ரூ. 10,000 ஆகவும் அரசு உயர்த்தியிருக்கிறது. அதற்குப் பிறகு எந்தவிதமான குற்றச்சாட்டுகளும் இதுவரை வரவில்லை.

திரு. பொ. முனுசாமி : ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் செயல்படுகின்ற மருந்தகங்களில் ஆண் டாக்டர்கள் இருக்கிறார்கள். பெண்கள் வைத்திய வசதி பெற பெண் டாக்டர்கள் இல்லை. பெண் டாக்டர்களைப் போட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : சாதாரணமாக உடல் நோய்க்காக வருகிற பெண்களுக்கு ஆண் டாக்டர்களே பரிசீலனை செய்து மருந்து தருகிறார்கள். மற்றப்படி பிள்ளைப்பேறுக்காக வருகிறவர்களைக் கவனிக்க பிள்ளைப் பேற்றில் தேர்ச்சி பெற்றவர்கள் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. மு. ஜான் வின்சென்ட் : அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது 2,500 ரூபாயை 5,000 ரூபாயாகவும் 5,000 ரூபாயைப் பத்தாயிரமாகவும் அதிகரித்திருப்பதாகக் கூறினார்கள். ஆண்டுக்காண்டு ஜனத்தொகை உற்பத்தி அதிகரித்துக் கொண்டே வரும் காரணத்தால் ஜனத்தொகை அடிப்படையில் கூடுதலாக மருந்து வழங்க அரசுமுன்வருமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : அந்த ஜனப் பெருக்கத்தையும் மக்களின் தேவையையும் அனுசரித்துத்தான் பணத்தின் வரம்பை அரசு உயர்த்தியிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய நிலையில் ஏற்கனவே 12,000 ரூபாய் அளவு மருந்து கொடுக்கப் பட்டு வந்தது. தற்போது இந்த அரசு வந்த பிறகு அந்தத் தொகை 14,000 ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்தியிருக்கிறது. அதே போன்று நடமாடும் மருத்துவ மனைகளுக்கு 15,000 ரூபாய் மருந்து வாங்குவதற்காக இருந்த அளவை 25,000 ரூபாய் என்ற அளவுக்கு உயர்த்த அரசு தற்போது பரிசீலனை செய்து வருகின்றது. இதற்கு மேலும் நடத்தப்படுகிற மருந்தகங்களில் தற்போது சொன்ன விகிதத்தில் மருந்துகள் தரப்படுவதால் எந்தவிதமான மருந்து தட்டுப்பாடும் தற்போது இல்லை.

(முற்பகல் 9.40)

திரு. இ. தமிழரசன் : தலைவர் அவர்களே, நகராட்சி மன்றங்கள், மற்றும் ஒன்றிய மருந்தகங்களுக்குத் தேவையான மருந்துகளை வாங்குவதற்கு அரசு உதவிப்பணம் வழங்கப்படுகிறது என்று சொன்னார்கள். ஆனால் ஒன்றியங்கள், நகராட்சி மன்றங்களில் அந்த மருந்துகள் ஒழுங்காக வாங்கப்பட்டு சரியாக நோயாளிகளுக்குக் கொடுக்கப்படுவதில்லை. ஆகவே அரசாங்கம் அதற்காக பணம் கொடுப்பதற்குப் பதிலாக அரசே மருந்துகளை வாங்கிக் கொடுத்தால் அந்த நோயாளிகளுக்கும் பயனுள்ளதாக இருக்கும், ஆகவே பணத்தை நிறுத்திவிட்டு மருந்துகளாக வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, பொதுவாக அரசாங்கத்தால் எந்த அளவிற்கு எவ்வளவு தரப்படவேண்டுமென்று கூறப்படுகிறதோ அந்த அளவிற்குத்தான் எல்லா நகராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களில் மருந்துகள் வாங்கப்பட்டு தரப்படுகின்றன. அப்படி ஏதாவது குறிப்பிட்ட இடத்தில் வழங்கப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அரசின் கவனத்திற்குக் கொண்டுவருவாரானால் நடவடிக்கை எடுக்கப்படும்.